# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

Under Section 173 BNSS

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

8082870

1. District மாவட்டம் : ARIYALUR PS: காவல்நிலையம் : V&AC, ARIYALUR Year: ஆண்டு : 2025 FIR No.: மு.த.அ. எண் : 2 Date: நாள் : 06.02.2025

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(a) and 12

(ii) Act சட்டம்: Indian Penal Code Sections பிரிவுகள்: 120(B), 468, 471, 477(A), 201 r/w 34

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 15.5.2020 Date to : நாள் வரை 13.12.2020

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 06.02.2025 Time : நேரம் 11.00 AM

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Collected Information

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் Food Safety and Drugs Administration office, Ariyalur, 3 Kms West.

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Hemachithra K.S (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் M. Singaravadivel

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1991 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் DSP, V&AC, Perambalur, i/c Ariyalur (g) Address : முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. Dr. S. Praveen Kumar S/o Sathyamoorthy, The Designated Officer, Food Safety and Drugs Administration Department, Ariyalur and 2 others (Separate Sheet Attached)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No Delay

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமா்ப்பிக்கப்படுகிறது.

K.S ஹேமசித்ரா, காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு பெரம்பலூர் பொறுப்பு அரியலூர் ஆகிய நான் இன்று 06.02.2025-ம் தேதி காலை 11.00 மணியளவில் அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் பணியில் இருந்த போது சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரக குறிப்பாணை எண் PE113/2022/F&D/ARL Dt:10.01.2025-ன் உத்தரவுப்படி பதிவு செய்த வழக்கின் விபரம் பின்வருமாறு.

(Seprate Sheet Enclosed)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளா் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 6/2/25

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 12.00 Hrs / 6.2.2025
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் Hemachitra K.S
Rank: நிலை DSP, VAC ....No. எண் ..........
Perambalur,
i/c Ariyalur

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21 3.16(HCL-12)p.2

அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்: 02/2025

முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:

| | |
|---|---|
| **எதிரிகள்**<br>1. மரு.S.பிரவீன்குமார்,<br>த/பெ. சத்தியமூர்த்தி,<br>நியமன அலுவலர், உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை,<br>அரியலூர் மாவட்டம்.<br>தற்போது:<br>நியமன அலுவலர், உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை,<br>புதுக்கோட்டை மாவட்டம்.<br><br>2. மரு. K.நடராஜன்,<br>த/பெ. காசிநாதன்,<br>நியமன அலுவலர், உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை,<br>அரியலூர் மாவட்டம்.<br>தற்போது:<br>Senior Assistant /surgeon,<br>அரசு ஆரம்ப சுகாதார நிலையம்,<br>சூலூர், கோயம்புத்தூர் மாவட்டம்.<br><br>3. திரு.ஜீவானந்தம்,<br>த/பெ. சின்னப்பிள்ளை,<br>ஹோட்டல் லயா இன் உரிமையாளர்,<br>அரியலூர்.<br>வீட்டு முகவரி:<br>67 G.V.R Complex, Sri Mahalakshmi Appartment, 1st Cross West, தில்லை நகர், திருச்சி.<br>(Private Individual). | **எதிரி-1** மரு.S.பிரவீன்குமார் என்பவர் 11.12.2019-ம் தேதி முதல் 01.06.2020-ம் தேதி வரை அரியலூர் மாவட்ட உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை அலுவலகத்தில் நியமன அலுவலராக பணிபுரிந்துள்ளார்.<br><br>**எதிரி-2** மரு.K.நடராஜன் என்பவர் 01.06.2020-ம் தேதி முதல் 23.09.2021-ம் தேதி வரை அரியலூர் மாவட்ட உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை அலுவலகத்தில் நியமன அலுவலராக பணிபுரிந்துள்ளார்.<br><br>மேற்கண்ட 1 மற்றும் 2 எதிரிகள் ஊழல் தடுப்புச் சட்டம் 1988 (திருத்தம் 2018), பிரிவு 2(c)-இன் படி பொது ஊழியர் ஆவார்கள்.<br><br>எதிரி-3 திரு.ஜீவானந்தம் என்பவர் தனி நபர் ஆவார்.<br><br>கடந்த 2020-ம் ஆண்டு Covid-19 பெருந்தொற்று பரவல் காலத்தில் அரியலூர் அரசு தலைமை மருத்துவமனையில் கொரோனா நோய் தொற்று பாதிக்கப்பட்ட நபர்களை தனிமைப்படுத்தப்பட்ட வார்டில் வைத்து சிகிச்சையளித்து வந்துள்ளனர். தனிமைப்படுத்தப்பட்ட வார்டுகளில் பணிபுரிந்த மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவப்பணி ஊழியர்களுக்கு உணவு மற்றும் தங்குமிடம் வசதிகளை அரசு நிதி வழங்கி செய்து வந்துள்ளது. |

கடந்த 24.03.2020 அன்று மத்திய அரசால் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகு மேற்கண்ட வசதிகளை செய்து தர அரியலூர் மாவட்ட ஆட்சியர் தனது அலுவலக ந.க.எச்3/608/2020 நாள் 25.03.2020-ன்படி மேற்படி பணிகளுக்காக அரியலூர் வட்டாட்சியர் அவர்களை நியமித்து உத்தரவிட்டுள்ளார். அதன்படி அப்போதைய அரியலூர் வட்டாட்சியர் திரு.சந்திரசேகரன் அவர்கள் மேற்கண்ட பணிகளை செய்து வந்துள்ளார். மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவமனைப்பணியாளர்களுக்கு தனியார் தங்கும் விடுதியில் அறை எடுத்து தங்கவைக்கப்பட்டுள்ளனர். மருத்துவர்கள் எனில் ஒரு அறையில் இரண்டு மருத்துவர்கள் வீதமும், செவிலியர்கள் மற்றும் மருத்துவமனைப்பணியாளர்கள் எனில் ஒரு அறையில் மூன்று நபர்கள் வீதமும் தங்கிக்கொள்ள வேண்டும் என்றும், அந்த

அறை ஒன்றின் வாடகை ரூ.800 முதல் 1400/- வரை என நிர்ணயம் செய்து தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு மூன்று வேலை உணவும் வழங்கப்பட்டுள்ளது. அதற்கான உரிய ரசீது பெறப்பட்டு வாடகை தொகை மற்றும் உணவிற்கான செலவு ஆகியவை சம்பந்தப்பட்ட தங்கும் விடுதிகளுக்கு தனித்தனியாக காசோலையாக அரியலூர் வட்டாட்சியர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

பின்னர் மேற்கண்ட பணிகளுக்கு மாநில் பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அப்பணிகளை செயல்படுத்துவதற்காக உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை ஆணையர், சென்னை அவர்களால் அரியலூர் மாவட்டத்திற்கு எதிரி-1 மருத்துவர்.ச.பிரவீன்குமார் என்பவரை Nodal Officer ஆக நியமிக்கப்பட்டு பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளது. அவர் பணிமாறுதலில் சென்ற பிறகு அரியலூர் மாவட்ட நியமன அலுவலராக பணிபுரிந்த எதிரி-2 மருத்துவர்.கா.நடராஜன் என்பவர் Nodal Officer ஆக இருந்து மேற்படி பணிகளை செய்து வந்துள்ளார். அதன்படி 15.05.2020-ம் தேதி முதல் 13.12.2020-ம் தேதி வரை மருத்துவர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்கள் தங்கும் விடுதி மற்றும் உணவு செலவீனங்களுக்காக ஆணையர், உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை சென்னை அவர்களின் செயல்முறைகள் R.No 2535/2020/S13/FSSA dated:09.05.2020, 08.06.2020, 07.07.2020, 03.102020, 29.01.2020 மற்றும் 02.03.2021-ன்படி அரியலூர் மாவட்ட நியமன அலுவலர்களுக்கு சில நிபந்தனைகள் விதித்து ரூ 3,07,18,063/- நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது. இதன்படி நாள் ஒன்றிற்கு ஒரு மருத்துவருக்கான மொத்த செலவு ரூ.2500/-க்கு மிகாமலும், செவிலியருக்கு ரூ.1500/-க்கு மிகாமலும் மற்றும் மருத்துவமனைப்பணியாளர்களுக்கு ரூ.1000/-க்கு மிகாமலும் செலவிடப்பட வேண்டும் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அந்த காலக்கட்டத்தில் எதிரி-1 மருத்துவர் ச.பிரவீன்குமார் 11.12.2019 தேதி முதல் 01.06.2020-ம் தேதி வரையிலும், எதிரி-2 மருத்துவர்.கா.நடராஜன் 01.06.2020-ம் தேதி முதல் 23.09.2021-ம் தேதி வரையிலும் அரியலூர் உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை நியமன அலுவலர்களாக செயல்பட்டு வந்துள்ளார்கள். மேற்கண்ட கொரோனா காலக்கட்டத்தில் அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் அவர்களின் அலுவலகத்திலிருந்து கொரோனா நோயாளிகள் தனிமைப்படுத்தப்பட்ட வார்டுகளில் பணிபுரிய நியமிக்கப்பட்ட மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவமனைப்பணியாளர்களின் சுழற்சி முறையிலான பணிப்பட்டியல், தேதி மற்றும் பணி ஒதுக்கீட்டு விபரங்களுடன் மேற்கண்ட எதிரிகளின் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அதன்படி எதிரிகள் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவமனைப்பணியாளர்களுக்கு தங்கும் இடம், உணவு மற்றும் தேவையானவற்றை முறையாக செய்து கொடுக்க வேண்டும்.

எதிரி-1 தான் நியமன அலுவலராக பணிபுரிந்த காலக்கட்டத்தில் 15.05.2020ம் தேதி முதல் 26.05.2020-ம் தேதி வரை கொரோன வார்டுகளில் பணிபுரிந்த மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவமனைப்பணியாளர்கள் தங்குவதற்கும், அவர்களுக்கான உணவுகள் வழங்குவதற்கும், அரசால் வகுக்கப்பட்ட விதிகள் எதையும் கவனத்தில் கொள்ளாமல், அரசு பணத்தை நேர்மையற்ற முறையில் கையாடல் செய்யும் கெட்ட நோக்கத்தோடு செயல்பட்டு தனிநபரான எதிரி-3 திரு.ஜீவானந்தம் என்பவரோடு கூட்டு சேர்ந்து, கூட்டு சதி செய்து அரியலூர் நகரில் எதிரி-3 நடத்திவரும் லயா இன் ஹோட்டலில் மேற்கண்ட பணியளார்கள் தங்கவைப்பபட்டு, உணவு அளிக்கப்பட்டுள்ளது. அறை ஒன்றிற்கான ஒரு நாள் வாடகை மற்றும் ஒரு நபருக்கான உணவு செலவு மற்றும் இதர

செலவுகள் குறித்து எவ்வித நிர்ணயம் செய்யாமலும், மற்ற தங்கும் விடுதி மற்றும் உணவு விடுதி உரிமையாளர்களோடு தொடர்பு கொண்டு விலைப்புள்ளிகள் ஏதும் பெறாமலும், மேற்கண்ட விபரங்கள் உள்ளடக்கிய உடன்படிக்கை ஏதும் போடாமலும், வழிகாட்டு நெறிமுறைகள் எதனையும் பின்பற்றாமலும், எதிரி-1 செயல்பட்டு மேற்கண்ட காலகட்டத்தில் மருத்துவர் ஒருவருக்கு ஒரு நாள் தங்கும் அறை வாடகை ரூ.1685.80/- என்றும், செவிலியர் ஒருவருக்கு ரூ.783.20/- என்றும், மருத்துவமனை பணியாளர் ஒருவருக்கு ரூ.393/- என்றும், இதில் 12% GST என்றும், நபர் ஒருவருக்கான காலை உணவு செலவு ரூ.114/-, மதிய உணவு ரூ.208/-, இரவு உணவு ரூ.114/- மற்றும் நாள் ஒன்றிற்கு ஸ்நாக்ஸ் செலவு ஒரு நபருக்கு ரூ.85/- மற்றும் 5% GST என்றும் குறிப்பிட்டு அரசு நிர்ணயித்த தொகையினை ஈடு செய்து கையாடல் செய்யும் பொருட்டு தனி நபரான எதிரி-3 என்பவரின் துணையோடு போலியான ரசீதுகள் தயார் செய்து, பொய் ஆவணம் புனைந்து, ரூ.853020/- தொகையினை எதிரி-1 மரு.ச.பிரவீன்குமார் தனது அலுவலக செயல்முறைகள் ந.க.எண்.316/A1/2020, நாள்: 27.05.2020-ன்படி மேற்படி ஹோட்டல் லயா இன் வங்கி கணக்கிற்கு காசாக்கம் செய்து செலுத்தியுள்ளார். மேற்கண்ட காலகட்டத்தில் எதிரி-1 அரசு நிர்ணயத்ததை விட கூடுதலாக ரூ.488/-ஐ மருத்துவர் ஒருவருக்கான ஒருநாள் அறைவாடகை என காண்பித்து மொத்தம் 156 நபர்களுக்கு ரூ.76128/- கையாடல் செய்துள்ளார். மேலும், செவிலியர்கள் மற்றும் மருத்துவமனை பணியாளர்களை தங்கும் விடுதியில் தங்க வைக்காமலேயே அவர்கள் தங்கியது போல் பொய் கணக்கு காண்பித்து, செவிலியர்களுக்கான அறை வாடகை ரூ.231576/- என்றும், மருத்துவமனை பணியாளர்களுக்கான அறை வாடகை ரூ.31692/- என்றும் பொய் கணக்கு காண்பித்து ஆகமொத்தம் ரூ.339396/- அரசுப்பணத்தை கையாடல் செய்துள்ளார். இதற்கு லயா இன் ஹோட்டலின் உரிமையாளர் எதிரி-3 திரு.ஜீவானந்தம் உடந்தையாக இருந்துள்ளார். மேலும், வருமான வரிச்சட்டம் பிரிவு 194(c)-ன்படி பிடித்தம் செய்யப்படவேண்டிய தொகை ரூ.12795/-ஐ வேண்டுமென்றே பிடித்தம் செய்யாமல் அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளார்.

இதன் பின்னர் நியமன அலுவலராக 01.06.2020 அன்று பொறுப்பேற்றுக்கொண்ட எதிரி - 2 மரு.கா.நடராஜன் மேற்கண்ட எதிரி-3 திரு.ஜீவானந்தம் என்பவரோடு கூட்டு சேர்ந்து, கூட்டு சதி செய்து 27.05.2020-ம்தேதி முதல் 13.12.2020-ம்தேதி வரையிலான காலகட்டத்தில் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவமனை பணியாளர்களுக்கு தங்கும் விடுதி, உணவு மற்றும் ஸ்நாக்ஸ் ஏற்பாடு செய்து கொடுத்ததற்காக ஹோட்டல் லயா இன் நிறுவனத்திற்கு ரூ.29338952/- எதிரி-2 மரு.கா.நடராஜன் என்பவரால் காசாக்கம் செய்து செலுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட காலகட்டத்தில் எதிரி-2 அரசு நிர்ணயத்ததை விட கூடுதலாக ரூ.488/-ஐ மருத்துவர் ஒருவருக்கான ஒருநாள் அறை வாடகை என காண்பித்து மொத்தம் 717 நபர்களுக்கு ரூ.349896/- கையாடல் செய்துள்ளார். மேலும், செவிலியர்கள் மற்றும் மருத்துவமனை பணியாளர்களை தங்கும் விடுதியில் தங்க வைக்காமலேயே அவர்கள் தங்கியது போல் பொய் கணக்கு காண்பித்து, செவிலியர்களுக்கான அறை வாடகை ரூ.7002218/- என்றும், மருத்துவமனை பணியாளர்களுக்கான அறை வாடகை ரூ.3642670/- என்றும் வாடகைக்காக செலவிடப்பட்டதாக பொய் கணக்கு காண்பித்து ஆகமொத்தம் ரூ.10731516/- அரசுப்பணத்தை கையாடல் செய்துள்ளார். இதற்கு லயா இன் ஹோட்டலின் உரிமையாளர் எதிரி-3 திரு.ஜீவானந்தம் உடந்தையாக இருந்துள்ளார். மேலும், வருமான வரிச்சட்டம் பிரிவு 194(c)-ன்படி பிடித்தம் செய்யப்படவேண்டிய தொகை ரூ.321098/-ஐ எதிரி-2 மரு.கா.நடராஜன் என்பரால் வேண்டுமென்றே பிடித்தம் செய்யாமல் அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளார்.

எதிரிகள் 1 மற்றும் 2 ஆகியோர்கள் தாங்கள் பணிபுரிந்த வெவ்வேறு காலகட்டங்களில் கெரோனா வார்டுகளில் பணிபுரிந்த மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவமனை பணியாளர்களுக்கு தங்கும் அறை, உணவு மற்றும் பிற செலவீனங்களுக்காக ரூ.30191971/- தொகையை காசாக்கம் செய்து தனிநபரான எதிரி-3 திரு.ஜீவானந்தம் என்பவருக்கு சொந்தமான ஹோட்டல் லயா இன் நிறுவனத்திற்கு செலுத்தியுள்ளார்கள். மேற்கண்ட ஹோட்டலில் செவிலியர்கள் மற்றும் மருத்துவமனை பணியாளர்களை தங்க வைக்கப்படாமலேயே தங்கவைத்தது போலும், மருத்துவர் ஒருவருக்கு நாள் ஒன்றிற்கு கூடுதல் அறை வாடகை செலுத்தியது போல் பொய் கணக்கு காண்பித்து, பொய் ஆவணம் புனைந்து, தனி நபரான எதிரி-3 திரு.ஜீவானந்தம் என்பவரின் உதவியோடு எதிரி-1 மரு.ச.பிரவீன்குமார் என்பவர் ரூ.339396/-ம், எதிரி-2 மரு.கா.நடராஜன் என்பவர் ரூ.10731516/-ம் அரசு பணத்தை கையாடல் செய்து பண ஆதாயம் அடைந்துள்ளார்கள்.

மேலும், மேற்கண்ட எதிரிகள் 1 மற்றும் 2 ஆகியோர் வருமான வரிச்சட்டம் பிரிவு 194(c)-ன்படி அரசுக்கு சேரவேண்டிய வருமான வரியான ரூ.333893/- தொகையை பிடித்தம் செய்யாமல் வழங்கி அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளனர்.

எதிரி-3 திரு.ஜீவானந்தம் என்பவர் தனக்கு சொந்தமான ஹோட்டல் லயா இன்-ல் தங்கவைக்கப்படும் நபர்களின் பெயர் விபரங்கள் மற்றும் அதற்கான ஆவணங்களை முறையாக பராமரிக்காமலும், செவிலியர்கள் மற்றும் மருத்துவமனை பணியாளர்களை தங்க வைக்காமலேயே தங்க வைத்தது போல் எதிரிகள் 1 மற்றும் 2 ஆகியோர்களுடன் கூட்டு சேர்ந்து போலியான ரசீதுகள் தயார் செய்து கொடுத்தும், அரசு பணத்தை கையாடல் செய்யும் நோக்கத்தோடு உடந்தையாக இருந்தும், குற்றத்தினை மறைக்கும் நோக்கத்தில் ஹோட்டல் லயா இன் நிறுவனத்தின் ஆவணங்களை மறைத்தும்/அழித்தும் உள்ளார்.

எனவே, மேற்படி எதிரிகள் மீது அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 2/2025 ஊழல் தடுப்பு சட்டம் 1988(திருத்த சட்டம் 2018) பிரிவுகள் 13(2) r/w 13(1)(a) மற்றும் 12. இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 120(B), 468, 471, 477(A), 201 r/w 34-ன்படி இன்று 06.02.2025-ம் தேதி 11.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த முதல் தகவல் அறிக்கையின் அசல் கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி அரியலூர் அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்கள் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

6/2/2025

(K.S.ஹேமசித்ரா)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
பெரம்பலூர், (பொ) அரியலூர்.